# வாக்குமூலம்

## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.

## வழக்கு எண் : SC.No. 495/2023

## வழக்கு சாட்சி PW-5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரித்தங்கம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | அருணாச்சலம் | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | சிவகுருநாதபுரம் | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 12th, 2025.

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)

**முதல் விசாரணை :**

நான் சுரண்டையில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வசந்தா என்பவரை தெரியும். 2019 ஆம் வருடம் மாலை சுமார் 8.40 மணியளவில் நான் எங்கள் தெருவில் உள்ள கடைக்கு வந்து கொண்டிருந்தேன். அப்போது எதிரி எனது நண்பரின் அம்மா பார்த்து தேவடியா பலபட்டறை என்று அசிங்கமாக பேசினார். அதன் பின்னர் எதிரி வசந்தாவிடம் கொடுத்த பணத்தை கேட்டார். அதற்கு வசந்தா எதிரியிடம் ஒரு வாரம் கழித்து பணம் தருவதாக கூறினார். அப்போது எதிரி கையில் வைத்திருந்த அருவாளால் வசந்தாவின் கழுத்திலும் கையிலும் வெட்டினார், தலையிலும் வெட்டினார். அப்போது வசந்தா கையால் தடுத்தபோது, கையில் மூன்று விரல்களில் அருவாள் வெட்டுப்பட்டது. அதன் பின்னர் வசந்தா கிறங்கி கீழே விழுந்துவிட்டார். மாரிச்செல்வம், கவின் நான் ஆகியோர்கள் காயம்பட்ட வசந்தாவை தண்ணீர் தெளித்து தூக்கி விட்டோம். அதன்

பின்னர் கவினும், மாரி செல்வமும் காயம் பட்ட வசந்தாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.18 21:37:20 +0530